ஒப்புகை பெறத்தக்க பதிவு

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
தேசிய நெடுஞ்சாலை வட்டம், சேலம்.

டி.ஆர்.பி.எண்.175/ இவஅ-2/ தே.நெ/2025-26/ நாள்.29.01.2026.

பெறுநர்,

திருவாளர்.ஸ்ரீ செந்தூர் வேலவன் இன்ப்ராஸ் இந்தியா (பி) லிமிடெட்,
ஒப்பந்தக்காரர்,
எஸ்.எஃப்.எண். 115/1 & 2, சத்தி மெயின் ரோடு,
மார்கெட்டிங் கமிட்டி அருகில், அன்னூர்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 653.

அன்புடையீர்,

பொருள் : சேலம் (தே.நெ) வட்டம்- கோபிசெட்டிபாளையம் (தே.நெ) கோட்டம்- மத்திய சாலை நிதி திட்டப் பணி - 2025-26 ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபிசெட்டிபாளையம்-ஈரோடு சாலையில் இருவழித்தடத்திலிருந்து பாவுதளத்துடன் கூடிய இருவழித்தடமாக அகலப்படுத்துதல் கி.மீ.95/0 - கி.மீ.100/0இல் வலுப்படுத்துதல் கி.மீ.96/10, 97/6, 99/2, 99/6 இல் பெட்டிபாலம் திரும்ப கட்டுதல் கி.மீ 99/8இல் குழாய் பாலம் அகலப்படுத்துதல் கி.மீ.96/10, 98/4இல் தடுப்புச் சுவர் கட்டுதல் பணிக்கு வேலை உத்தரவு வழங்குவது- சம்மந்தமாக.

பார்வை :
1. தங்களது ஒப்பந்தப்புள்ளி நாள்.05.01.2026
2. தங்களது விலை குறைப்பு கடிதம் நாள்.09.01.2026
3. தலைவர்/முதன்மை இயக்குநர்,நெடுஞ்சாலைத்துறை,சென்னை, அவர்களின் செ.மு.க.எண்.10/360-27/ஆணையம்/தொ.நு.கு/ 2026, நாள்.28.01.2026.
4. தலைமைப் பொறியாளர் (தே.நெ) சென்னை அவர்களின், கு.எண் (கோ.மு.10வ) CRIF-2025-26- GOB-25/ஒப்-2 / தே.நெ/2026/ நாள்.28.01.2026.

*********

தமிழக ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களது சார்பிலும், மேற்கண்ட பணிக்கு பார்வை (1)ன்படி தங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு பேச்சுவார்தைக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் 0.30% மதிப்பீட்டு விலைக்கு குறைவாக (2025-26) ஜி.எஸ்.டி உட்பட மொத்த ஒப்பந்தத் தொகைக்கு ரூ.12,38,91,203/-(ரூபாய் பன்னிரெண்டு கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து இருநூற்று மூன்று மட்டும்) (அடிப்படைத் தொகை ரூ.10,49,92,545/- ஜி.எஸ்.டி @ 18% ரூ.1,88,98,658/-)க்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தாங்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் முன்வைப்புத் தொகையாக ரூ.6,32,000/-க்கு வங்கி வரைவோலை வடிவில் செலுத்தியுள்ளீர்கள்.

தாங்கள் மேற்கண்ட பணிக்கு பிணை வைப்பு தொகையாக ரூ.24,78,000/-க்கு செலுத்த வேண்டும்.

/த.பி.பா/

Scanned with OKEN Scanner

எனவே, மேற்கண்ட பிணை வைப்பு தொகை ரூ.24,78,000/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்தெட்டாயிரம் மட்டும்) தேசிய சேமிப்பும் பத்திரங்களாகவோ, கிஷான் விகாஷ் பத்திரங்களாகவோ, அல்லது வைப்பு இரசீது வடிவிலோ 31.01.2031 வரை செல்லத்தக்க வகையில் கோட்டப் பொறியாளர் (தே.நெ) கோபிசெட்டிபாளையம் அவர்களின் பதவியின் பெயரில் அடமானம் செய்யப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ள கொண்டு வரவேண்டும். மேலும் நடப்பாண்டிற்குறிய சரக்கு மற்றும் சேவை வரிச் சான்றிதழ் கொண்டு வர வேண்டும்.

இப்பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிட வரும்பொழுது நெடுஞ்சாலைத்துறையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரரை அறிமுகமான நபரை சாட்சியாக அழைத்து வரவெண்டும். மேலும் இப்பணிக்கு கீழ்க்கண்டவாறு தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

ஒரு வருட அனுபவமுள்ள பி.இ (சிவில்) பொறியியல் பட்டதாரி ஒன்று மற்றும் சிவில் டிப்ளமோ படித்த ஐந்து வருட அனுபவமுள்ள இரண்டு தொழில்நுட்ப உதவியாளரின் சம்மதக் கடிதம் மற்றும் அவர்களது கல்வித் தகுதி சான்றிதழ் நகல் சான்றொப்பம் பெற்று இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

எழுத்து மூலம் செய்துகொள்கிற இந்த ஒப்பந்தம் தான் தங்களுக்கும் இந்த இலாக்காவிற்கும் அடிப்படை உரிமையாக கருதப்படும். தாங்கள் ஒப்பந்தப்பத்திரத்தில் முதலில் கையொப்பமிட்ட பிறகு அரசாங்கம் சார்பில் கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) சேலம், அவர்களால் கையொப்பமிட்ட பிறகுதான் செல்லத்தக்கதாகும்.

தாங்கள் இவ்வலுவலகத்திற்கு ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட 15 தினங்களுக்குள் வரத்தவறினால் தங்களுடைய வைப்புத் தொகை P.S. to S.S.R.B. விதி எண் 104.05-ன் படி பறிமுதல் செய்யப்படும்.

இது அபராதமாக கருதப்படாமல் இந்த இலாக்கா அடைந்த இழப்பை ஈடுசெய்யும் விதத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

29/1

கண்காணிப்புப் பொறியாளர்,
(தே.நெ) சேலம்.

29/1/26

நகல்: கோட்டப் பொறியாளர் (தே.நெ) கோபிசெட்டிபாளையம்

நகல்: உதவிக் கோட்டப்பொறியாளர் (தே.நெ) கோபிசெட்டிபாளையம்
தகவலுக்காக அனுப்பப்படுகிறது

Signature Not Verified

Digitally signed by M SHANMUGAM
Date: 2026.05.05 12:46:21 IST
Location: eProcure-EPROC

Scanned with OKEN Scanner